**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC 126/2021**
**Deposition of witness for prosecution –PW– 1**

| | | |
|---|---|---|
| Name | : | லுகேந்திரன் |
| Father Name | : | லோகநாதன் |
| Village | : | |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | சூப்பர்வைசர், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் |
| Religion | : | |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 04th day of December 2023.

**குறுக்கு விசாரணை:**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E. மெக்கானிக்கல் இன்ஜினியரிங்க் படித்துள்ளேன். நான் எனது மனுவில் எதிரி கனடா நாட்டில் வேலை வாங்கி தருவதாக விளம்பர படித்தியதாக கூறியதற்கு ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. எதிரியிடம் நான் பல்வேறு தவணைகளில் ரூ.7,00,000 கொடுத்தாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றாலும் ஆனால் எந்தெந்த தேதிகளில் எங்கு வைத்து எவ்வளவு தொகை எதிரியிடம் கொடுத்தேன் என்பது தொடர்பான சங்கதிகள் எதுவும் மனுவில் கூறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் மேற்படி தொகை நான் கொடுத்திருந்தால் அதற்கான தேதி மற்றும் இடம் மற்றும் ஆகியவை குறிப்பிட்டு நான் மனுவில் சொல்லியிருப்பேன் என்றும் அவ்வாறு இல்லை என்பதால் அவ்விதம் நான் எதையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி வேலை வாங்கி தருவதாக ஏமாற்றியது தொடர்பாக காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். எப்பொழுது புகார் கொடுத்தேன் என்றால் 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் புகார் கொடுத்தேன். மேற்படி புகார் கொடுக்கப்பட்டதன் தொடர்பாக ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காவல் துறையிடம் நான் புகார் கொடுத்த விபரத்தை என்னுடைய மனுவில் ஏதேனும் சொல்லியுள்ளேனா என்றால் என்னுடைய மனுவில் சொல்லவில்லை. என்னுடைய மனுவில் சாட்சிகள் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டதாக கூறியிருந்த போது யார் முன்னிலையில் மேற்படி எதிரியிடம் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தையோ மற்றும் அது தொடர்பான சாட்சி பட்டியலையோ என் மனுவில் எடுத்துரைக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பணத்தினை வங்கி பணப் பரிவர்த்தனை மூலமாக கொடுத்தேன் என்று எனது மனுவில் எடுத்துரைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மனுவில் 09.11.2019ம் தேதி இந்த எதிரியானவர் ரூ.7,50,000 தொடர்பான ஒப்பந்த பத்திரம் ஒன்று சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக்கொடுத்தாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக அந்த ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி மனுவை நான் படித்து பார்த்து தான் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். மேற்படி மனுவில் ஆவண விபரங்கள் சொல்லப்பட்டத்தில் மேற்படி ஒப்பந்தம் பற்றி ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி என்னிடம் எந்த விதமான ஒப்பந்த பத்திரமும் எழுதி கொடுக்கப்படவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக எதிரி ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பணம் தொடர்பான ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதேபோல் ரூ.7,50,000 பலரிடம் கடன் பெற்று கொடுத்துள்ளேன் என்று நான் எனது மனுவில் கூறியிருந்த போதிலும் அதை யார் யாரிடமிருந்து எந்த தேதியில் எவ்வளவு கடன் தொகை பெற்றேன் என்ற விபரத்தை நான் எனது மனுவில் கூறியுள்ளேனா என்றால் மனுவில் கூறவில்லை. மேற்படி தொகையை நான் நகையை அடமானம் வைத்து கொடுத்தேன் என்று கூறியதற்கு அடமானம் தொடர்பான ஏதேனும் ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எப்பொழுது B.E படிப்பை முடித்தேன் என்றால் 2018ம் வருடம் படித்து முடித்தேன். அதை தொடர்ந்து 2019, 2020ம் ஆண்டில் வேலைதேடி கொண்டிருந்தேனா என்றால் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் எங்கு எந்த கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன் என்றால் உள்ளூரில் லேத்–ல் வேலை செய்து வந்தேன். அந்த கம்பெனியின் பெயர் என்னவென்றால் ராஜேந்திரன் லேத் ஒர்க்ஸ். நான் எந்த கம்பெனியிலும் வேலை பார்க்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. அப்போது வேலை பார்க்கும் போது எனக்கு சம்பளம் கொடுக்கப்பட்டதாக என்றால் கொடுக்கப்பட்டது. எனக்கு தினசரி சம்பளம் மற்றும் மாத சம்பளம் எது கொடுக்கப்பட்டது என்றால் தினசரி சம்பளம் கொடுக்கப்பட்டது. எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் தினமும் ரூ.400 கொடுப்பார்கள். மேற்படி சம்பளம் என்னுடைய தினசரி செலவினங்களுக்கு சரியாக வருமென்றால் எனது மொத்த மாதந்திர செலவினங்களுக்கு சரியாக வரும். எதிரி எனக்கு காசோலை கொடுத்தார்கள் என்றும் அது மாறுபட்ட கையெழுத்து இருப்பதாக வங்கியில் திருப்பப்பட்டது என்றும் இது தொடர்பாக காவல்நிலையத்தில் நான் ஏதேனும் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரியிடம் மாறுபட்டு வங்கியால் திருப்பப்பட்டது குறித்து எதிரியிடம் அது குறித்து கேட்டேன் என்றால் கேட்டேன் எதிரியிடம் இருந்து எந்த ஒரு பதிலும் வரவில்லை. நான் மேற்படி விபரத்தை என்னுடைய மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் நான் பணம் பெறுவதற்காக எதிரி செலுத்திய காசோலையை வங்கியில் செலுத்திய போது பணம் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தொடர்பாக வங்கி வழங்கிய ஆவணம் எதனையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிரி வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்பதை மறைத்து எனக்கு காசோலை வழங்கி ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்பதை அடிப்படையாக கொண்டு நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் மனுவில்

குறிப்பிட்டுள்ளேன். எனது தரப்பில் நான்காவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியானவர் தற்போது கதவு எண்.10/1 ராஜா காம்ப்ளக்ஸ், காலிகா தேவி அம்மன் தெற்கு தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் என்ற முகவரியில் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். ஷை முகவரிக்கு, எதிரிக்கு எந்த வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். கோயம்புத்தூரில் Pride Management என்ற பெயரில் டிராவல்ஸ் நடத்தி வரும் ஷியாமளா என்பவரை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மின்னஞ்சல் முகவரி என்னவென்றால் lugendran11@gmail.com ஆகும். ராஜேஷ், நாராயணன் ஆகியவர்களை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். இந்த வழக்கிற்கும் ராஜேஷ், நாராயணன் என்பவரும் சம்மந்தம் இல்லை. ராஜேஷ், நாராயணன் ஆகிய இருவருடன் சேர்ந்து கோயம்புத்தூரில் நான் சென்று தங்கியது உண்டால் என்றால் இல்லை. வெளிநாடு செல்வது தொடர்பாக நான் எதிரியிடம் எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றும், நான் கோயம்புத்தூரில் உள்ள pride management என்ற பெயரில் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பி வைக்கும் ஷியாமளா என்பவரிடம் நான் நேரடியாக பணம் கொடுத்தேன் என்றாலும் மேற்படி எதிரியானவர் ஷியாமளா என்பவரை அறிமுகப்படுத்தினார் என்றாலும் சரியல்ல. எதிரி ஷியாமளா என்பவரை சென்று பாருங்கள் என்று மட்டும் சொன்னார். எதிரி இறுதியாக நான் கனடா நாட்டிற்கு பயணம் போகும் போது ஷியாமளா என்பவரை பாருங்கள் என்று மட்டும் சொன்னார். கோயம்புத்தூரை சேர்ந்த வழக்கறிஞர் சுரேஷ் பாபு என்பவர் ஷியாமளா சார்பாக எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியிருந்தரா என்றால் என்னுடைய கவனத்திற்கு எதுவும் வரவில்லை. மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் அதனை நான் பெற்றுக்கொண்டேன் என்றும் அந்த அறிவிப்பிலும் எனது கட்சிக்காரர் செல்வா என்ற எதிரி மூலம் அறிமுகமாக பணம் நான் கொடுத்துள்ளேன் என்றும் மேற்படி பணத்தையும் நான் வெளிநாடு செல்வதற்காக அர்ஜீன் என்பவரிடம் பணம் கொடுத்துவிட்டார் என்றும் அதனை அர்ஜீன் என்பவர் வாங்கி மோசடி செய்த காரணத்தினால் சென்னையில் உள்ள சென்ட்ரல் கிரைம் பிராஞ்ச் அலுவலகத்தில் புகார் கொடுத்து அவர் மீது வழக்கு செய்யப்பட்ட விபரம் குறித்து அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் இல்லை. அதேபோல் இந்த எதிரி 18.11.2019 ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அவர் வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு அனுப்பியிருந்தார் என்றும் அதனை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் அந்த அறிவிப்பில் இந்த எதிரியானவர் 07.11.2019 ம் தேதி தாங்களும் தங்கள் தகப்பனாரும் அடியாட்களுடன் சென்று மிரட்டி ஆணவங்களை எடுத்து சென்றதாகவும் அதனை பயன்படுத்தி எந்த வித வழக்கும் எந்த விதமான வழக்கும் தாக்கல் செய்யக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 01.09.2020 ம் தேதி எதிரி எம்மீதும் என் தகப்பனார் மீதும் பஜார் காவல் நிலையத்தில் இந்த எதிரியை தாக்கி சாதியை சொல்லி திட்டியதாக புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார். மேற்படி வழக்கை அதன் பின்னிட்டு தான் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த எதிரியானவர் தங்கள் மீதும் தங்கள் தகப்பனார் மீதும் பஜார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு தான் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு அதுகுறித்த விபரமும் தாங்கள் அறிந்து தற்சமயம் நீதிமன்றத்தில் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் நான் ஏற்கனவே எதிரியை தாக்கி என்மீதும், என் தகப்பனார் எதிரி புகார் கொடுத்தால்

ஏற்கனவே இந்த எதிரியை தாக்கி எடுத்துச்சென்ற காசோலையை நான் எதிரியின் கையொப்பமிட்டு இந்த வழக்கை எதிரிக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அதேபோல் கோயம்புத்தூரில் pride management டிராவல்ஸ் நடத்திவரும் ஷியாமளா என்பவர் தான் எனது மின்னஞ்சல் முகவரிக்கு விசா அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அதை மறைத்து நான் பொய்யாக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்மீது இராமநாதபுரம் நகர் காவல்நிலையத்தில் 09.11.2019 ம் தேதி எதிரியின் அலுவலகத்திற்கு அடியாட்களுடன் சென்று அங்கு பணிபுரிந்த ஆட்களையும், பொருட்களையும் சேதப்படுத்தியது தொடர்பாக புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரின் பேரில் நான் விசாரணைக்கு ஆஜரானேன் என்றும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் pride management டிராவல்ஸ் நடத்திவரும் ஷியாமளா என்பவர் தாங்கள் வெளிநாடு செல்வதற்காக செலுத்திய பணம் ரூ.5,50,000 த்தை கொடுத்துவிடும் பொருட்டு கடந்த 2019 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம் தேதி ஒரு ஒப்பந்த ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் எனக்கு எதிராக இருப்பதால் வேண்டுமென்ற அதனை மறைத்து தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரி என்னிடம் எந்த விதமான பணமும் வாங்கவில்லை என்றாலும் எதிரி என்னிடம் எந்த விதமான காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நானும் எனது தகப்பனாரும் அடியாட்களுடன் சென்று எதிரியை அவரது வீட்டில் வைத்து தாக்கி எடுத்துச்சென்ற பூர்த்தி செய்யப்படாத காசோலையில் தாங்கள் எதிரியின் கையொப்பத்தை போட்டு இந்த வழக்கினை திட்டமிட்டு எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னான் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரிக்கு எந்த விதமான முறையான அறிவிப்பும் காசோலை குறித்து அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணமானது 10.03.2020 என தேதியிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தேதியில் நான் செலுத்தி பணம் செலுத்தினேனா என்றால் அன்றைய தேதியில் இல்லை மற்றொரு காசோலையுடன் சேர்த்து நான் பணம் வேண்டி வங்கியில் செலுத்தினேன். ம.சா.ஆ.2 ஆவணம் 10.04.2020 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தேதியில் மேற்படி காசோலையை வங்கியில் செலுத்தி பணத்தை பெற முயற்சித்தேனா என்றால் அன்றைய தேதியில் இல்லை பின் வேறோரு நாளில் இரண்டு காசோலைகளையும் சேர்த்து நான் பணம் வேண்டி வங்கியில் செலுத்தினேன். ம.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் இந்த எதிரியானவர் ஒரு போதும் வசித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முகவரியிட்டு அனுப்பிய பகுதியில் தங்களுக்கு வேண்டிய நபர் அஞ்சல் துறையில் பணிபுரிவதால் அதனை பயன்படுத்திக்கொண்டு எதிரியானவர் தாங்கள் அனுப்பிய அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் கூடிய அறிவிப்பை not claimed என்று குறிப்பிட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஷியாமளா என்பவரை தாங்கள் வெளிநாடு செல்வதாக அறிமுகப்படுத்தி ஷியாமளா வெளிநாடு தங்களை அனுப்பி வைக்கததாலும் நீங்கள் ஷியாமளாவிடம் கொடுத்த பணத்தினை ஷியாமளா தங்களுக்கு திருப்பி செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்ததால் இந்த எதிரி மீது முன் விரோதம் கொண்டு இந்த வழக்கில் கண்ட ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2

ஆவணங்களை மோசடியாக பூர்த்தி செய்து இந்த எதிரிக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.